www.padippakam.com


# செந்தாரகை

சோசலிச ஐக்கிய இலங்கைக்காக சிங்கள, தமிழ் மொழிமூலம் வெளிவரும் செய்தித்தாள்

மலர் - 76
மே - 2010
இலங்கையில் செய்தித்தாளக
பதிவுசெய்யப்பட்டுள்ளது.
விலை ரூ. 20/=


## போராட்டமின்றி வெற்றியில்லை

தேர்தல் அலைகள் ஓய்ந்து விட்டன. பெருமை பாராட்டிக்கொண்டு கூட்டணியின் அமைச்சர்களும் மந்திரிமார்களும் வெற்றியைக் கொண்டாடுகின்றனர். நாட்டிற்குப் பெரும் சுமையாக இருந்த அமைச்சரவையை 30-35 வரை குறைப்பதாகக் கூறிய போதிலும் அமைச்சர்கள் குட்டி போடுவதைக் காணமுடியுமாயுள்ளது. மக்களை ஏமாற்றி பல்வேறு பெயர்களைச் சூட்டிக்கொண்டு கூட்டணியின் தலைவர்களுக்கு அவர்களது மனைவி மார்களையும் வீடுவாசல்களையும் பராமரிப்பதற்கும், தமது பைகளை நிரப்பிக் கொள்வதற்கும் தேவையான அமைச்சர் பதவிகளைப் போன்றே வேறு பதவிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. சனாதிபதித் தேர்தலின்போது சரத் பொன்சேகாவுடன் போட்டிக்குச் சென்று ரூபா 2500/- சம்பள உயர்வு வழங்குவதாக சனாதிபதி வாக்குறுதி அளித்தார். தற்போது அதைப் பற்றி அதிசயமானவற்றையே கூறுகின்றார். தனியார் துறையிலுள்ள ஏறத்தாழ 40 இலட்சம் ஊழியர்களுக்கு ரூபா 2500/- வழங்குவதைப் பற்றிய பேச்சே கிடையாது. இப்போது அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெறும் வீராப்பாக மட்டுமே உள்ளன.

வடக்கின் இடம்பெயர்ந்த மக்களது பிரச்சினைகளுக்கு அரசாங்கம் ஒட்டுப் போடுவதைத் தவிர தீர்வுகளைக் காணவில்லை. மீளக் குடியேறச் சென்ற வன்னி மக்கள் வாழ முடியாது பல பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர். தேசிய பிரச்சினையைத் தீர்ப்பது ஒரு புறமிருக்க வடக்கின் மக்கள் முகம்கொடுக கின்ற நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கூட மஹிந்த, கருணா அம்மான் மற்றும் தேவானந்தவின் அரசாங்கத்தினால் முடியாதுள்ளது. தொழிற் சங்க மகா சம்மேளனம் உள்ளிட்ட தொழிற் சங்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ள ரூபா 5000/- சம்பள அதிகரிப்புக்கான பிரேரணையைப் பற்றி அரசாங்கம் முற்றாக மௌனம் சாதிக்கின்றது.

பட்டதாரிகளின் பிரச்சினையும் அதே இடத்தில் தேங்கியுள்ளது. தேர்தல்கள் முடிவடையும் வரை ஏமாற்று வார்த்தைகளின் மூலம் காலத்தைக் கடத்திய அமைச்சர்களை இப்போது கண்டு பிடிக்கவே முடியாதுள்ளது. பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வித் துறை பிரச்சினைகளின் காரணமாக மென்மேலும் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது. விவசாயிகளின் நிலைமையும் இதற்கு இரண்டாம் தரமானதல்ல. நெல் கொள்வனவு செய்யப்படுவதைப் பற்றி அரசாங்கத்தி னால் மேற்கொள்ளப்படுகின்ற ஊடகப் பிரசாரங்களும் உண்மையானவையல்ல. விவசாய மக்கள் பெரியதொரு வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கியுள்ள னர்.

அதிகரிக்கின்ற பொருளாதார நெருக்கடியினுள் மென்மேலும் மக்களைத் தாக்குவதற்கும், பண்டங்களின் விலைகளை அதிகரிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். இந்நிலைமை யினுள் தொழிலாளர் வர்க்கத்திற்கும் தொழிற் சங்க இயக்கத்திற்கும் இளைஞர்களுக்கும் மற்றும் மாணவர் இயக்கங்களுக்கும், வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வென்றெடுப்பதற்கும் வர்க்கப் போராட்டப் பாதையில் பிரவேசிப்பதைத் தவிர வேறு வழி கிடையாது. அத்தகைய போராட்டங் களைக் குழு வாதத்திலிருந்தும், சந்தர்ப்ப வாதத்திலிருந்தும் பாதுகாத்து விரிவானதொரு மக்கள் போராட்டமாக மாற்றுவது அனைவரினதும் பொறுப் பாகும்.

## தமிழ் இளைஞர்களை விடுதலை செய்!

வடக்கின் யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்துகொண்டிருக்கையில் அரச இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு அகதிகளாக வந்த ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்களாகக் கருதப்பட்டு கைது செய்யப்பட்டனர். இவர்களில் அநேகமானோர் தற்போது ஒரு வருடத்திற்கும் அதிக காலமாக எவ்விதக் குற்றச்சாட்டுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தவிர யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் மலைநாடு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் புலிச் சந்தேக நபர்களெனக் கருதப்பட்டு பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் அநேகமாக இரண்டு மூன்று வருடங்களாக குற்றச் சாட்டுகள் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ள னர்.

குற்றச் சாட்டுகள் எதுமின்றி அவசர காலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவ்விளைஞர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறும், அரசாங்கம் கூறுகின்றவாறு புலிகள் இயக்கம் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளமையினால் பொது வாழ்க்கையில் சேர்வதற்கு இவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குமாறும் ஐ.சோ.க. அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது.

## சிக்கலுக்கு மத்தியில் ஐ.தே.க.

பொதுத் தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்யினுள் பாரியதொரு பிரச்சினை உருவாகியுள்ளதென்பதைக் காணலாம். ஒரு காலத்தில் ஆசியாவின் பலம் பொருந்தியதொரு வலதுசாரிக் கட்சியாக விளங்கிய ஐதேக இலங்கை வரலாற்றிலே மிகப் பலவீனமானதொரு நிலைக்கு இத் தேர்தலின்போது உள்ளாகியது.

ஆட்சியைக் கைப்பற்றும் பொருட்டு எவ்வாறான கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்பதைப் பற்றி கட்சியினுள் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளதென அறியவந்துள்ளது. ஐதேக சிங்கள பௌத்த மக்களை மறந்துள்ளமையே இத் தோல்விக்குக் காரணமாகும் என்பது சஜித் பிரேமதாச உள்ளிட்ட தலைமைத்துவத்தின் ஒரு பகுதியினரின் கருத்தாக உள்ளது. கட்சி சிறுபான்மையினர் மீது அதிக கவனம் செலுத்த முற்பட்டமையினால் கட்சியின் கிராமிய சிங்கள பௌத்த மக்கள் தளத்தை இழக்க நேரிட்டதென்ற கருத்தைக் கொண்டுள்ள இவர்களின் ஊடாக எதிர்காலத்தில் ஐதேக வினுள் இக்கருத்து வேரூன்றக் கூடியதொரு நிலைமை உருவாகலாம் என ஐதேக வின் உள்ளகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எவ்வாறாயினும் ரணில் விக்கிரமசிங்கவின் பலவீனமான தலைமைத்துவத்திற்கு ஐதேகவை வெற்றியின்பால் நடத்திச் செல்ல முடியாதென்ற உணர்வும் கட்சியின் கீழ் மட்டத்தினரிடையே கடுமையாகப் பரவி வருகின்றது. ரணில் ஐதேக அரசாங்கமொன்றைக் கட்டியெழுப்புவதை விட மஹிந்தவுடன் சேர்ந்து ஏகாதிபத்தியவாத நவீன தாராளமயப் பொருளாதார வேலைத் திட்டமொன்றை எமது நாட்டில் செயற்படுத்துவதற்கு ஆர்வம் காட்டுகின்றாரென்பது தெளிவாகின்றது. இந்நிலைமையினுள் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஐதேகவை முறியடிப்பதற்கு நுட்பமான முறையில் செயலாற்றுவதையும் காணக் கூடியதாயுள்ளது.

## பிரகீத் - 100 நாட்கள்

### உங்களைப் பற்றிப் பேசிய ஒரு மனிதன்



பிரகீத் எக்னெலிகொட எனும் ஊடகவியலாளர் 2010 சனவரி மாதம் 24 ஆம் திகதியே காணாமற் போனார். ஏப்பிரல் 24 ஆம் திகதிக்கு இவர் காணமற்போய் மூன்று மாதங்கள் ஆவதோடு, மே மாதம் 3 ஆம் திகதிக்கு 100 நாட்கள் ஆகின்றன. இலங்கையின் பொலீசாரால் இதுவரை பிரகீத் காணாமற்போனமை பற்றிய எவ்விதத் தடயங்களையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அரசாங்கமும் இது தொடர்பில் முற்றாக மௌனம் சாதிக்கின்றது. இவ்வாறானதொரு பொலீசாரால், இவ்வாறானதொரு அரசாங்கத்தால் மக்களுக்கு என்னதான் நன்மை கிடைக்கப் ஏபோகின்றது.

பிரகீத் காணாமற்போனமை, லசந்த கொலை செய்யப்பட்டமை, போத்தல தாக்கப்பட்டமை மற்றும் வடக்கு – கிழக்கில் கடத்தப்படுகின்றமை அத்துடன் காணாமற் போனோர் பற்றிய கூற்றுக்கள் போன்ற முழு நாடும் குரல் எழுப்புகின்ற பிரச்சினைகள் தொடர்பில் பொலீசாரும் ராஜபக்ஷ அரசாங்கமும் மௌனமாயிருக்கின்ற நிலைமையினுள் வாழ்வதற்கான உரிமை, சனநாயகம் மற்றும் விடுதலைக்காக மக்கள் இயக்கமொன்றின் ஊடாக பாரியதொரு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு கடந்ததொரு தினத்தில் ஒன்றுகூடிய மக்கள் செயற்பாட்டாளர்கள், சிவில் பிரசைகள், தொழிற் சங்கத் தலைவர்கள் உள்ளிட்ட ஒரு குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

அவ்வாறானதொரு விரிவான மக்கள் சக்தியொன்றைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றுசேருமாறு அனைத்துப் பிரசைகளுக்கும் இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

සිරිතුංග ජයසූරිය වන මා විසින් 53/6, ඊ.ඩී. දාබරේ මාවත, නාරාහේන්පිට පිහිටි රෝයල් මුද්‍රණාලයේදී මුද්‍රණය කරන ලදී.

படிப்பகம்

www.padippakam.com



# இடதுசாரிகளின் ஒற்றுமை பற்றிய ஒரு கருத்து

கடந்த பிரதானமான இரண்டு தேர்தல்களையும் தழுவியதான இடதுசாரிகளின் ஒற்றுமை – இடதுசாரிகளின் ஒற்றுமை பற்றிய விடயம் தொடர்பில் இடத்துக்கு இடம் பேசப்பட்டது. இந்த இரண்டு தேர்தல்களிலும் ஐக்கிய சோசலிசக் கட்சி, இடதுசாரி முன்னணி, சோசலிச சமத்துவக் கட்சி ஆகிய இடதுசாரிக் கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டன. இதில் சோசக மக்கள் மத்தியில் செயற்படாத ஒரு கட்சியாக இருந்தமையால் ஐசோக வுக்கும் இடதுசாரி முன்னணிக்கும் இடையே ஒற்றுமை இல்லாதிருந்தமையைப் பற்றியே இந்தப் பேச்சுகள் இடம்பெற்றன.

எனது கருத்துப்படி இப் பேச்சுக்கள் அநேகமாக இடதுசாரிகளுக்குச் சார்பான முன்னாள் இடதுசாரிகளின் (Ex Lefts) மத்தியிலேயே நடைபெற்றன. இவர்களில் அநேகமானோர் முன்னர் ஏதாவது ஒரு இடதுசாரிக் கட்சியில் சேர்ந்திருந்தவர்களாவர். ஆயினும் தற்போது எந்தவொரு கட்சியிலும் அங்கத்துவம் வகிக்காது இவர்கள் பொதுவாக இடதுசாரிகளாகத் தோன்றுகின்றனர். அதேபோன்று ஒருசில தொழிற் சங்க செயற்பாடாளர்கள் இதைப் பற்றிப் பேசியதைப் போன்றே எம்மிடம் விசாரித்த சந்தர்ப்பங்களும் இருந்தன.

எமது நாட்டில் இடதுசாரிகளின் ஒற்றுமை என்று துர்ப்பாக்கிய வசமாக தேர்தல்களின் போது ஒன்றிணைந்து போட்டியிடுவதையே பொதுவாக கருதுகின்றனர். சனாதிபதித் தேர்தலின் போது ஒரு இடதுசாரி வேட்பாளரை முன்நிறுத்துதல், பொதுத் தேர்தலின் போது இடதுசாரிகளின் தனியொரு பட்டியலை முன்வைத்தல் ஆகிய விடயங்களையே அநேகமானவர்கள் ஒற்றுமையாகக் காண்கின்றனர். இந்த ஒற்றுமையும் முக்கியமல்லாதது அல்ல. ஆயினும் இடதுசாரிகளின் ஒற்றுமை பற்றி விடுபாடுகளின்றி எமது நாட்டின் அரசியலின் இணைந்த நிலைமையினை அடிப்படையாகக் கொண்டே பேச வேண்டியுள்ளது.

கடந்த சனாதிபதித் தேர்தலின் போது ஒரு இடதுசாரி வேட்பாளரை முன்னிறுத்துதல் தொடர்பில் இடதுசாரி முன்னணி எம்முடன் கலந்துரையாடியது. இடதுசாரி முன்னணியின் வேண்டுகோளின் பேரில் நடைபெற்ற இக் கலந்துரையாடலுக்கு இவர்கள், இடதுசாரி முன்னணி அதன் சனாதிபதி வேட்பாளராக தோழர் விக்கிரமபாகுவை முன்னிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதால் அதற்காகப் பேச்சுவார்த்தை நடத்தி ஐசோக வின் ஒத்துழைப்பைக் கோருவதற்காகவே வந்திருந்தனர். ஐக்கியமான அடிப்படையில் இடதுசாரி பொது வேட்பாளரொருவரை நிறுத்துவதற்கான ஒரு அடிப்படை அங்கே இருக்கவில்லை. சனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளர் ஒருவரை முன்நிறுத்த வேண்டுமென ஐசோக வும் 2009 ஒக்றோபர் மாதத்தில் நடைபெற்ற கட்சியின் மாநாட்டின் போது தீர்மானித்திருந்தது. ஆதலால் அனைத்து இடதுசாரிப் பிரிவுகளையும் ஒன்றுசேர்த்து இடதுசாரி பொது வேட்பாளர் ஒருரை முன்நிறுத்துதல் என்ற விடயம் பற்றியும் இதற்கு மிகப் பொருத்தமான வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானித்தல் பற்றியும் விரிவானதொரு கலந்துரையாடலை நடத்துதலே நடைபெறவேண்டியிருந்தது. ஆயினும் இடதுசாரி முன்னணி அவர்களது தீர்ப்பை ஏனையவர்கள் மீது திணிப்பதற்கு எடுத்த ஆதிக்கவாதத் தேவையின் காரணத்தினால் அவ்வாறான ஒரு கலந்துரையாடலுக்கு வாய்ப்பிருக்கவில்லை.

ஏகாதிபத்தியத்திற்கும், உலகளாவிய முதலாளித்துவத்திற்கும், இனவாதத்திற்கும் எதிராக இடதுசாரி மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான மிகச் சிறந்த வேட்பாளர் தோழர் பாகு அல்ல என்பதே ஐசோக வின் கருத்தாக இருந்தது. இதற்கு முன்னர் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களின் போது இடதுசாரிக் கட்சிகளில் பிரதானமான சக்தியாக இடதுசாரி முற்போக்கு மக்கள் ஐக்கிய சோசலிசக் கட்சியையே தெரிவு செய்திருந்தனர். ஆதலால் 2005 இல் போட்டியிட்ட தோழர் சிறிதுங்கவை மீண்டும் சனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு நாம் தீர்மானித்திருந்த போதிலும் இடதுசாரிகளுடன் கலந்துரையாடலுக்கு திறந்ததொரு நிலைப்பாட்டிலேயே ஐசோக இருந்தது.

இவ்விரண்டு தீர்மானங்களினதும் பின்னணியை ஆராய்ந்து பார்க்கவும். பாகு மற்றும் இடதுசாரி முன்னணி முழுமையாகவே கற்பனை அடிப்படையிலான தீர்மானமொன்றையே எடுக்கின்றது. அத்தீர்மானத்திற்கு வருவதற்கான காரணமாக, தமிழ் தேசிய கூட்டணியின் ஒரு பிரிவினருடன் - சிவாஜிலிங்கத்துடன் அவர்கள் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளதாகவும் இதன்படி வடக்கில் பாரியதொரு ஒத்துழைப்பு பாகுவுக்குக் கிடைக்குமென்றும் அவர்கள் கூறினார்கள். ஐசோக வின் தீர்மானத்திற்கு அடிப்படையாயிருந்தது அனுபவத்தின் மூலம் நிரூபிக்கப்பட்ட இணைந்த நிலைமைகளாகும். இறுதியில் என்ன நடந்தது. இடதுசாரிகளின் பிரதானமான வேட்பாளராக தோழர் சிறிதுங்க மீண்டுமொருமுறை முன்வந்தார். தனிநபர் புகழும், சிவாஜிலிங்கம் உள்ளிட்ட ரீஎன்ஏ ஒரு பிரிவினரினது ஒத்துழைப்புடனும் பெருந் தொகைப் பணத்தைச் செலவிட்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட போதிலும் பாகுவுக்கும் அவருடன் சேர்ந்த ஐசோக விலிருந்து தப்பிச் சென்ற குழுவாதப் பிரிவினருக்கும் இடதுசாரிகளின் வாக்குகளைப் பெற முடியவில்லை. பாகு பெருமளவில் எதிர்பார்ப்பு வைத்திருந்த தமிழ் மக்கள் வடக்கு கிழக்கிலோ, மலைநாட்டிலோ, கொழும்பிலோ அவருக்குப் பெருமளவு வாக்குகளை அளித்திருக்கவில்லை. பெருமளவு பணம் தமிழ் மக்களிடமிருந்து கிடைத்ததாக பாகு இரண்டு தடவைகள் பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருந்தார்.

பெரும் எதிர்பார்ப்புகளை வைத்திருந்த போதிலும் இடதுசாரி முன்னணி அந்தப் பாரிய பின்னடைவிலிருந்து ஒரு பாடத்தைக் கற்காதிருந்தது மட்டுமல்லாமல் பொதுத் தேர்தலுக்கு வருகின்ற போது தமிழ் கூட்டணியின் ஒரு பாதியளவைப் பறித்தெடுத்து மேலும் அரசியலிலிருந்து தப்பியோடிய இடதுசாரிகள் எனக் கூறிக்கொள்ளும் புறக்கியெடுக்கக் கூடிய ஒருசிலரையும் சேர்த்துக்கொண்டு இடதுசாரி விடுதலை முன்னணி என்ற புதியதொரு ஆடையையும் அணிந்துகொண்டு மேடைக்கு வந்தது. இடதுசாரிகளின் - இடதுசாரிகள் சார்பானதெனக் கூறிக்கொள்ளும் ஒருசிலரும் இதனைக் கண்டதும் மயங்கி விட்டனர். ஆயினும் வீரர் வேடம் தரித்து இடதுசாரி வாக்குகளையும் தமிழ் மக்களையும் கொள்ளையடிக்க அல்லது பறித்தெடுக்க முடியாதென்பதை சனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பெற்ற வாக்குகளின் மூலம் மீண்டும் தெளிவாகின்றது. யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பைத் தவிர இ.வி.மு வும் ஐசோக வும் போட்டியிட்ட பல மாவட்டங்களிலும் ஐசோக இ.வி.மு வை தாண்டிச் சென்று முன்னேறியுள்ளது. தேர்தல் அரசியலானது புரட்சிவாதிகளின் பலத்தை அளவிடுகின்ற பிரதானமானதொரு அளவுகோளாக இல்லாத போதிலும் கனவுலகுகளில் இருந்துகொண்டு அல்லது கற்பனையான விதத்தில் இடதுசாரி இயக்கத்தை கட்டியெழுப்ப முடியாதென்பது இத் தேர்தல் பெறுபேறுகளிலிருந்து தெளிவாகின்றது.

நாம் இந்த விபரங்களைச் சமர்ப்பித்தது ஐசோக வைப் பற்றி பெருமை பாராட்டுவதற்கல்ல. இடதுசாரி இயக்கத்தைக் கட்டியெழுப்புதல், ஒற்றுமைப்படுத்தலைப் பற்றிப் பேசுவதாயின் நாம் உண்மையான நிலைமையை (ground situation) புரிந்துகொள்ளல் வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுவதற்கேயாகும். ஏனெனில் கடந்த சனாபதித் தேர்தலின் போது ஏன் நீங்கள் பாகுவுக்கு ஒத்துழைப்பு வழங்காது தனியாகப் போட்டியிடுகிறீர்கள்? என இடதுசாரிகள் எனக் கூறிக்கொள்ளும் பலர் எம்மிடம் விசாரித்தார்கள். அவ்வாறான இடதுசாரி நண்பர்களுக்கு உண்மையான நிலைமையை சுட்டிக்காட்டுதல் வேண்டும் என எண்ணியதாலேயே இதனை எழுதினோம்.

ஆதலால் இந்த இணைந்த நிலைமையைப் புரிந்துகொண்டு தேர்தல் அரசியலிலிருந்து விடுபட்டு இடதுசாரி இயக்கத்தை ஒற்றுமைப்படுத்துதல் பற்றிய புதியதொரு அணுகுமுறையின்பால் நாம் செல்லவேண்டியுள்ளோம். தொடர்ச்சியாக நடைபெற்ற தேர்தலகள் தற்போது முடிவடைந்துள்ளதால் எமக்கு இப்போது இவ்வாறு சிந்திப்பதற்கு – பார்ப்பதற்கு முடியுமான ஒரு சூழல் உருவாகியுள்ளது. தேர்தல்களைப் பார்க்காது மக்கள் போராட்டக் களத்தில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல் பற்றியே நாம் கவனம் செலுத்த வேண்டும். அனைத்து எதிர்க்கட்சி சக்திகளினதும் எதிர்க் கருத்துக்களை அடக்கி ஒடுக்கிவிடுகின்ற மஹிந்த ராஜபக்ஷவின் புல்டோசர் கோட்பாடு செயற்பட ஆரம்பிக்கின்றபோது எம்மால் தொடர்ந்தும் இவ்வாறு தனிமையாக இருக்க முடியாது. நிச்சயமாகப் போராட்ட களத்தில் குதிக்க வேண்டி நேரிடும். தலைவர்கள் மௌனமாயிருந்தால் தொழிலாளர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அடக்குமுறைக்கு உள்ளாகின்ற மக்கள் அவர்களை கீழே வீழ்த்திவிட்டு சிலநேரம் அராஜகமான விதத்தில் போராட்ட களத்தில் குதிப்பார்கள். ஆதலால் நாம் மிகவும் கவனமாகவும் விழிப்புடனும் இருந்து அடக்குமுறைக்கு – அழுத்தத்திற்கு மற்றும் பயங்கரத்திற்கு எதிராக மக்களை அணிதிரட்டவும், மக்கள் போராட்டத்திற்கு தலைமை வகிக்கவும் வேண்டும். இடதுசாரி சக்திகள் பிரிந்து – சீர்குலைந்து இந் நிலைமைக்கு முகம்கொடுக்க முடியாது. ஆதலால் இடதுசாரிகளின் ஒற்றுமையைப் பற்றி தாழ்மையாக இப்போது புதிதாகச் சிந்திப்பதற்கான காலம் வந்துள்ளது.

இந்நாட்டை ஐக்கியமான ஒரு நாடாக பாதுகாத்து முன்னேறிச் செல்வதே எமக்குள்ள பிரதானமான சவாலாகும். தமிழ் மக்களது தேசிய பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு சுயநிர்ணய உரிமைக்காகத் தோற்றுதலே இதற்காகச் செய்ய வேண்டிய விடயமாயுள்ளது. தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அதனை கீழ்ப்படுத்தி தமிழ் மக்கள் போராட்டத்தினை நசுக்கி விடுதலே ராஜபக்ஷ அரசாங்கத்தினதும் சிங்கள முதலாளித்து வர்க்கத்தினதும் ஒரே நோக்கமாயுள்ளது. அதற்கு இடமளிக்காது வடக்கிலும் கிழக்கிலும் மலைநாட்டிலும் அதேபோன்று கொழும்பு உள்ளிட்ட நகர்புறங்களிலும் வாழ்க்கின்ற தமிழ் மொழியைப் பேசுகின்ற தமிழ் மற்றும் முஸ்லிம் அனைத்து மக்களினதும் தேசிய உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும் வென்றெடுக்கும் பொருட்டு போராடுவதே இடதுசாரி இயக்கத்தின் அண்மியகால கடமையாயுள்ளது. தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்களது உரிமைகளுக்காக போராடி முக்கியமாக தொழிலாளர் வர்க்கம் உள்ளிட்ட தெற்கின் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களை இப் போராட்டத்தில் இணைத்துக்கொள்வதற்கு இடதுசாரிகளால் மட்டுமே முடியுமாகும். முதலாளித்துவ முறையைக் கவிழ்த்து விடும் பொருட்டான வடக்கு – தெற்கு இணைந்த போராட்டம் இவ்வாறே உருவாகின்றது.

ஸ்ரீநாத் பெரேரா

படிப்பகம்

செந்தாரகை
53/6, ச.ஏ. தபரே மாவத்தை, கொழும்பு 05
தொ. 011 4510289, 011 2504647
www.lankasocialist.com

# ராஜபக்ஷ அரசாங்கத்தின் பஞ்சாயுதம் அவசர காலச் சட்டம்

புதியதொரு இலங்கையில் வளமான எதிர்காலத்தை உருவாக்குவதாக வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் புதிய பாராளுமன்றம் உத்தியோக ரீதியிலான அலுவல்களின் நிமித்தம் முதற் தடவையாக அவசர காலச் சட்டத்தை மேலுமொரு மாதத்திற்கு நீடிப்பதற்காகவே கூடுகின்றது. அதேபோன்று கலைக்கப்பட்ட பாராளுமன்றம் அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்காகவே, இலங்கையின் வரலாற்றில் சாதனை படைக்கும் வகையில் முதற் தடவையாக கடந்த மார்ச் மற்றும் ஏப்ரில் மாதங்களில் இரு தடவை கூடியது. ராஜபக்ஷ ஆட்சிக்கு தமது ஆட்சியைப் பேணிவரும் பொருட்டு அவசர காலச் சட்டம் நிலைத்திருப்பது எவ்வளவு முக்கியமானதென்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்துக்கு அவசர காலச் சட்டமானது, மஹிந்த ராஜபக்ஷவின் நேரடி எதிரியாக மாறியுள்ள ஜெனரால் சரத் பொன்சேகாவை சிறையிலடைத்து வைப்பதற்கே பிரதானமாகத் தேவையானதாயுள்ளது. அவரது மனைவி மற்றும் சட்டத் தரணி ஒருவரைத் தவிர வேறு எவராலும் அவரைச் சந்திக்க முடியாதவாறு தனிமையானதொரு கூடத்தில் பொன்சேகாவைச் சிறைப்படுத்தி வைக்கக் கூடிய வேறு எவ்விதச் சட்டமும் நாட்டில் கிடையாது. தாம் விரும்பியவாறு விதிக்க முடியுமாயுள்ள அவசர காலச் சட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் தமது சகோதரரான பாதுகாப்புச் செயலாளரைக் கொண்டு முன்னாள் படைத் தளபதியைச் சிறையிலடைத்து வைக்கும் அளவுக்கு இந்த சனாதிபதி கொடூரமானவராக மாறியுள்ளார். இவ்வாறு சிறைப்படுத்தி வைப்பதன் மூலம் ராஜபக்ஷ ஆட்சியானது, இன்னுமுமே எவ்விதக் குற்றச்சாட்டு தொடர்பிலும் குற்றவாளியாக்கப்படாத ஒருவரை குற்றவாளியாகக் கருதி தண்டனை வழங்குவதையே செய்து வருகின்றது.

2005 ஆம் ஆண்டில் புதியதொரு இலங்கையைக் கட்டியெழுப்புவதாக வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ இன்றுவரை தமது ஆட்சியை அவசர காலச் சட்டத்தின் கீழேயே நடத்தி வருகிறார். அப்போதிருந்த அவசர காலச் சட்ட ஒழுங்கு விதிகளில் ஒன்றையேனும் நீக்காத ராஜபக்ஷ அதற்குப் பதிலாக புதிய புதிய ஒழுங்கு விதிகளை இருக்கின்ற ஒழுங்கு விதிகளோடு சேர்த்துக்கொண்டுள்ளார். யுத்தம் நிலவிய காலத்தில் யுத்தத்தைக் கொண்டு நடாத்தும் பொருட்டு அவசர காலச் சட்டம் தேவையென அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் (UNP அரசாங்கம் இருந்தபோது அந்த அரசாங்கத்தின் தலைவர்கள்) முன்வைத்த தர்க்கத்தை ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம் எனினும் தற்போது யுத்தம் நடைபெறுவ தில்லை. ஆதலால் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற அவசர காலச் சட்டம் இப்போது நீக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக மஹிந்த ராஜபக்ஷ கடந்த மார்ச் மாதத்தில் அப்போதிருந்த அவசர கால ஒழுங்கு விதிகளை விதித்து சந்தேக நபர்களைத் தடுத்து வைக்கின்ற எட்டு இடங்களைப் புதிதாகச் சேர்த்துக்கொண்டார். எத்தகைய சந்தேக நபர்களை இவ்வாறு தடுத்து வைக்கப் போகிறார்? LTTE சந்தேக நபர்கள் புதிதாக கைது செய்யப்படுவார்களா? எதிர்காலத்தில் ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக போராட்ட களத்தில் குதிக்கின்ற வடக்கின் மற்றும் தெற்கின் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் ஏனைய பாதிக்கப்பட்ட மக்களை சிறையில் அடைப்பதற்காகவே இத் தடுப்பு முகாம்கள் தாபிக்கப்படுகின்றன என்பதே உண்மையான காரணமாகும்.

இப்போது வளமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு விடா முயற்சியுடன் களத்தில் இறங்கியுள்ள மஹிந்த ராஜபக்ஷ அவசர காலச் சட்டத்தைப் பற்றி ஒரு சொல் கூட சொல்கிறார் இல்லை. அவரது மஹிந்த சிந்தனை எனக் கூறப்படும் எதிர்கால நோக்கினை வரைந்த ஒரு புரோகிதராவது அவசர காலச் சட்டத்தை நீக்குவதைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. அதேபோன்று முடிவடைந்த சனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது ஆளும் கட்சியின் எந்தவொரு வேட்பாளரும் அவசர காலச் சட்டம் தொடர்ந்து பேணிவரப் படுவதைப் பற்றி குறிப்பிடவில்லை. அவசர நிலைமையின் போது மட்டும் நிலவ வேண்டிய அவசர காலச் சட்டம் ஆறு வருடத்திற்கும் அதிக காலம் தொடர்ந்து பேணிவரப்பட்டமை இத்தேர்தல்களில் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை போலுள்ளது.

எதிர்க் கட்சியின் பிரதானமான இரண்டு கட்சிகளாகிய ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் (பொதுத் தேர்தலின் போது சனநாயக தேசிய கூட்டணி) அவசர காலச் சட்டத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், அதனைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததொரு விடயமாகக் கருதி பொது மக்களுக்கு மத்தியில் கொண்டு செல்வதற்கு முடியவில்லை. ஐதேக வாழ்க்கைச் செலவு மற்றும் பொருளாதாரத்தின் வீழ்ச்சி பற்றியே முக்கிய கவனம் செலுத்தியதோடு, மவிமு ஜெனரால் பொன்சேகாவை விடுதலை செய்கின்ற விடயம் தொடர்பிலேயே முன்னுரிமை அளித்தது. ஐதேக ஜெனராலை விடுதலை செய்வதாகக் கூறிய போதிலும் இந்த இரண்டு கட்சிகளும் அவசர காலச் சட்டத்தை இல்லாதொழித்தல் என்ற விடயத்துக்கு குறைந்த முக்கியத்துவத்தினையே வழங்கின. நல்லாட்சியைப் பற்றி பெரிதாகப் பேசிய இந்த இரண்டு கட்சிகளும் இங்கு 17வது திருத்தத்தை அமுலாக்குவதன் தேவை தொடர்பிலேயே கவனம் செலுத்தின. நல்லாட்சி இல்லாமைக்கான பிரதானமான காரணியாக விளங்கிய, நீண்ட காலம் அவசர காலச் சட்டத்தைப் பேணிவருதல் தொடர்பில் இவர்கள் குறைந்தளவு கவனத்தையே செலுத்தினார்கள். ஐதேக மற்றும் மவிமு அண்மைக் காலம் வரை அவசர காலச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு மஹிந்தவுக்கு பாராளுமன்றத்தில் வாக்களித்தன.

துர்ப்பாக்கியவசமாக 'சிவில்' அமைப்புகளும் புத்திசீவிகளும் அவசர காலச் சட்டத்தை நீக்குதல் முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய விடயமெனக் கருதவில்லை போலுள்ளது. புத்திசீவிகளாகத் தோற்றிய அநேகமானோர் இன்று ராஜபக்ஷவின் புகழ் பாடுகின்றனர் என்பதோடு முன்னர் கடுமையாக விமர்சித்த புத்திசீவிகளும் இன்று மௌனமாயிருக்கின்றனர் போலுள்ளது. நல்லாட்சியின் முன்னோடியாக ஒரு காலம் திகழ்ந்த 'ராவய' பத்திரிகை கூட இன்று இந்த விடயத்தில் மௌனம்சாதிக்கின்றது. அவசர காலச் சட்டம் உள்ளிட்ட நாட்டில் நிலவுகின்ற பிரதானமான பிரச்சினைகள் தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ ஒரு சொல் கூட சொல்கிறார் இல்லை என்பதைப் பற்றி 'ராவய' ஆசிரியர் எவ்விதக் கேள்வியையும் எழுப்புவதாகத் தெரியவில்லை.

1971 ஆம் ஆண்டிலிருந்து இந் நாடு அதிக காலம் அவசர காலச் சட்டத்தின் கீழேயே ஆளப்பட்டு வந்துள்ளது. 1983 இன் பின்னர் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்கியொடுக்கும் பொருட்டு ஐதேக, ஸ்ரீலசுக கூட்டணி அரசாங்கங்கள் அவசர காலச் சட்டத்தையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் தாராளமாகப் பயன்படுத்தின. கடந்த பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை மவிமு வும் அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்குச் சார்பாக வாக்களித்தமையை நாம் மறக்கவில்லை. ஆதலால் அவசர காலச் சட்டத்திற்கு எதிராக இந்தக் கட்சிகள் பேசுகின்ற பேச்சுக்கள் தன்னைத் தானே ஏமாற்றுவது போலுள்ளது.

எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தைத் தோல்வியுறச் செய்து யுத்தத்தில் வெற்றி பெற்று இப்போது ஒரு வருடத்தையும் தாண்டிச் சென்றுகொண்டுள்ளது. அரசாங்கம் கூறுகின்றவாறு இப்போது எவ்விதப் பயங்கரவாத அச்சுறுத்தலும் இல்லை. அவ்வாறாயின் தொடர்ந்தும் அவசர காலச் சட்டத்தையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் பேணிவருவது ஏன்? கூட்டணியின் தலைவர்கள் கூறுகின்றவாறு அவர்களுக்கு நாடு பூராவும் மிகப் பெருமளவு மக்கள் ஆதரவு உள்ளதெனில் அவசர காலச் சட்டத்தை நீக்குவதற்கு ராஜபக்ஷ ஆட்சி இவ்வளவு தயங்குவது ஏன்? இந்த அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு – அழுத்தத்திற்கு எதிராக எதிர் காலத்திலும் வடக்கிலும் தெற்கிலும் தொழிலாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள் ஆகிய பல்வேறு பிரிவினர்களும் போராட்டத்தில் இறங்குவதைத் தவிர்க்க முடியாது. இப் போராட்டங்களை அடக்கியொடுக்கும் பொருட்டு ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு அவசர காலச் சட்டம் இன்றியமையாததாயுள்ளது. ஆதலால் அவசர காலச் சட்டத்தை உடனடியாக நீக்கும்படி கோருகின்ற விரிவான சனநாயக ரீதியிலான மக்கள் சக்தியொன்றைக் கட்டியெழுப்புவதை மேலும் தாமதப்படுத்த முடியாது என்பதை ஐக்கிய சோசலிசக் கட்சி வலியுறுத்துகின்றது.

එක්සත් සමාජවාදී පක්ෂය
ஐக்கிய சோசலிச கட்சி
UNITED SOCIALIST PARTY

ஐக்கிய சோசலிச இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக நீங்களும் சேருங்கள். நீங்கள் எங்களோடு தொடர்புகொள்வதற்கு அல்லது கலந்துரையாடுவதற்கு விரும்பினால் இக்கூப்பனை நிரப்பி அனுப்புங்கள்

பெயர் ..................
வயது ..................
முகவரி ..................
தொழில் ..................

SENTHARAHAI
No. 53/6, E.D. Dhabare Mawatha, Narahenpita, Colombo - 05.
Tel: 011 4510289 Fax: 011 2504647

www.padippakam.com



# 2010 பொதுத் தேர்தல்



2010 பொதுத் தேர்தல் பெறுபேறுகள், வடக்கின் யுத்த வெற்றியின் மூலம் தூண்டிவிடப்பட்ட சிங்கள பௌத்த தேசிய உணர்வு சனாதிபதித் தேர்தலின் ஊடாக இத்தடவை பொதுத் தேர்தலின்போது சிம்மாசனமேறியதென்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆயினும் சுதந்திர கூட்டணி 2/3 பெரும்பான்மை அதிகாரத்தை பெறுவதற்கு அண்மித்த எண்ணிக்கையிலான ஆசனங்களை வெற்றி கொண்டுள்ள போதிலும் ஒட்டுமொத்தமான வாக்காளர்களில் பெரும்பான்மையானோர் வாக்களிக்காதிருந்ததன் மூலம் அரசாங்கத்துக்கு இருக்கும் மக்கள் பலம் வீழ்ச்சியடைந்துள்ளமையைக் காண்கிறோம். பொதுவாக 80 சதவீதமளவிலான வாக்களிக்கும் சதவீதத்தினைக் கொண்டுள்ள எமது நாட்டில் இத்தடவை பொதுத் தேர்தலின் போது வாக்களித்தோர் எண்ணிக்கை சிறிதளவு 50 சதவீதத்தைத் தாண்டியுள்ளமையானது தற்போதுள்ள தேர்தல் முறையையிட்டும் அதேபோன்று தற்போதுள்ள முதலாளித்துவ அரசாங்கத்தின் பேரிலும் மக்கள் மௌனமாக எதிர்ப்பைக் தெரிவித்துள்ளனர் என்பதாகவே குறிப்பிட முடிமாயுள்ளது.

பொதுத் தேர்தலுக்கு இரண்டரை மாதத்திற்கு முன்னர் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின் போது கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையை ஆளும் கட்சியால் (கூட்டணியால்) பாதுகாக்க முடியாமற் போனமை மக்கள் அரசாங்கத்தின் கன்னத்தில் தாக்கியதைப் போலுள்ளது. 2/3 இற்கு அண்மிய பாராளுமன்ற உறுப்பினர் தொகையொன்றை வென்றெடுக்க முடியுமாயிருந்தமையைப் பற்றி அரசாங்கத்தின் தலைவர்கள் பெருமையடித்த போதிலும் ஐதேக உள்ளிட்ட எதிர்க்கட்சியின் வங்குரோத்து நிலைமையின் காரணமாக அரசாங்கம் வெற்றிபெற்றதென்பதை அவர்கள் மூடி மறைக்கின்றனர். எதிர்க்கட்சி சனாதிபதித் தோதலன் போது பெறற வாககுகளன எண்ணிக்கையை பாதுகாத்திருப்பின் கூட்டணிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை கூட பெறமுடியாத நிலைமையொன்று உருவாவதற்கு வாயப்பிருந்தது.

கூட்டணியின் விருப்பு வாக்குப் பட்டியல்களில் மிக மேலால் உள்ளவர்கள் மஹிந்தவுக்கு மிக நெருங்கிய சிங்கள பௌத்த கருத்தியலின் வீரர்களாகத் தோற்றியவர்களென்பது கூட்டணியின் பெறுபேறுகளை நோக்குகின்ற போது காணக்கூடியதாயுள்ள மேலுமொரு முக்கியமான விடயமாகும். விமல், சம்பிக்க, தினேஷ், கெஹெலிய, ஜொன்ஸ்டன், நாமல், பசில், சியம்பலாபிட்டிய, சனத் ஜயசூரிய ஆகியோர் இவர்களிடையே உள்ளனர். விமல் வீரவன்சவுக்கு ஏற்ப தற்போது நாட்டுப் பற்றுள்ளோர்களின் ஓர் அரசாங்கமே உள்ளது. தற்போதைய இலங்கையில் சிறுபான்மையினர் என ஒரு பிரிவினர் இல்லையென்றே ராஜபக்ஷ கூறுகின்றார். அதாவது தேசிய பிரச்சினையொன்று இல்லையென்பது அவர்களது முடிவாக உள்ளது. அரசாங்கம் 2/3 பெரும்பான்மை அதிகாரத்தை வேண்டி நின்றது அரசியலமைப்பு மாற்றமொன்றுக்காகும். அரசியலமைப்பு மாற்றமொன்று தேவை என்ற பொதுக் கருத்தொன்று இலங்கைச் சமூகத்தில் நிலவுகின்றது. அதில் ஒன்று, நாட்டிற்கு கெடுதி விளைவிக்கின்ற சனநாயகத்தின் நிலைத்திருத்தலுக்குப் பாதகமாயுள்ள விருப்பு வாக்கு முறையையும் நிறைவேற்றதிகார முறையையும் ஒழித்தல் வேண்டுமென்ற கருத்தாகும். இரண்டாவது, வடக்கு கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்குகின்ற தேசிய பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு 13 வது அரசியலமைப்புத் திருத்தத்தைத் தாண்டிச் செல்கின்ற தீர்வைக் கொண்ட அரசியலமைப்புத் திருத்தமொன்றை உருவாக்குதலாகும். மூன்றாவது, சனநாயகத்தை உறுதிசெய்யும் பொருட்டு அரசியலமைப்புச் சபையை அமுல்படுத்தி சுயாதீன தேர்தல் ஆணைக் குழு, பொலீஸ் ஆணைக் குழு ஆகிய நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலாகும்.

## சிங்கள இனவாதம்

அரசாங்கம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் எதை எதிர்பார்க்கின்றது என்பதைப் பற்றி சனாதிபதித் தேர்தலின் போதோ அல்லது பொதுத் தேர்தலின் போதோ அறிவிக்கவில்லை. அவர்கள் திட்டமிட்டே அதைப் பற்றிப் பேசாதிருப்பதற்கும் மக்களை 'இருளில் வைத்திருப்பதற்கும் கவனமாயிருந்தனர். ஆயினும் தற்போது இரகசியத்தை அம்பலப்படுத்த நேரிடுகின்றது. நிறைவேற்றதிகாரத்தைத் தொடர்ந்தும் வேறு விதத்தில் பேணிவந்து நாட்டை ராஜபக்ஷமயமாக்கலுக்கு உள்ளாக்குகின்ற சர்வாதிகாரத்திற்கு அவசியமான சூழலை உருவாக்குதல் அதன் நோக்கமாயிருக்கும். பெரும்பாலான சிங்களவர்களது மனதை திரிபுபடுத்தி தொழிலாளர்களது, விவசாயிகளது, இளைஞர்களது மற்றும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினரது உரிமைகளைக் குறைக்கின்ற அரசியலமைப்பு மாற்றமொன்றுக்கு மேற்கொள்ளப்படுகின்ற மக்கள் துரோக சதித் திட்டத்தினை தோல்வியுறச் செய்தல் நாட்டின் முன்னேயுள்ள அண்மிய சவாலாக உள்ளது.

### வங்குரோத்து ஐதேக

ஐக்கிய தேசியக் கட்சி முதற்கொண்ட பாராளுமன்ற முதலாளித்துவ எதிர்க்கட்சி இச்சவால்களுக்கு முகம்கொடுக்கத் தேவையான மக்கள் அணிதிரட்டலை நோக்கிச் செல்லாதென்பதற்கு விளக்கங்கள் தேவையில்லை. மக்களுக்கு மூடி மறைத்துவிட்டு ராஜபக்ஷ ஆட்சி மேற்கொண்டு வருகின்ற உலகளாவிய முதலாளித்துவ வேலைத் திட்டத்திற்கு ஐதேக முழுமையான ஆதரவைத் தெரிவிக்கும். அதனை ஐதேக மௌனமாயிருந்து அங்கீகரிக்கும். தொழிலாளர் வர்க்கம், பாதிக்கப்பட்ட விவசாயிகள் உள்ளிட்ட மக்கள் தேவையின் நிமித்தம் ம▯ந்த மேற்கொண்டு வருகின்ற அழிவுகரமான புதிய தாராளமய பொருளாதார வேலைத் திட்டத்திற்கு எதிராக மாற்று வேலைத் திட்டமொன்றை ஐதேக விடமிருந்து ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. ரணில் விக்கிரமசிங்க வெட்கமின்றி தொடர்ந்தும் ஐதேக வின் தலைவராக இருப்பதற்கு எடுக்கின்ற முயற்சியானது ஐதேக வின் இவ்வரசியல் தேவையின் ஊடாக வருவதென்பதைப் புரிந்துகொள்ளல் அத்தியாவசியமாகும். இதன்படி தேவையான காலம் எதிர்க்கட்சியில் இருந்து நித்திரை மயக்கத்தில் இருப்பதற்கு ஐதேக தலைமைத்துவம் தயாராயுள்ளது.

### மவிமு நெருக்கடி

மக்கள் விடுதலை முன்னணி நெருக்கடியெதுவும் இல்லையெனக் கூறிய போதிலும் அது தீர்க்கமானதொரு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. அதிகாரத்தைக் கைப்பற்றும் உபாய ரீதியிலானதொரு வேலைத் திட்டமாக மவிமு கட்டியெழுப்பிய சிங்கள இனவாத அரசியல் வேலைத் திட்டம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. மஹீந்த – விமல் - சம்பிக்க – தினேஷ் ஆகியோர் மேற்படி சிங்கள இனவாத அரசியலின் தலைவர்களாக மாறியதைத் தொடர்ந்து மவிமு வின் இனவாத வகிபாகம் இல்லாதொழிந்துள்ளது. 1971 மற்றும் 1989 கலவரங்களின் மூலம் உருவாகிய பின்னடைவின் ஊடாக மீண்டும் எழுச்சி பெறுவதற்கு மவிமு வுக்கு ஆற்றல் இருந்த போதிலும் இனவாத அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக முதலாளித்துவ ஸ்ரீலசுக வுடன் கூட்டரசாங்கமொன்றை ஏற்படுத்தி அமைச்சர் பதவிகளைப் பெற்றுக்கொண்டதன் மூலம் மவிமு உருவாக்கிக்கொண்ட நெருக்கடியிலிருந்து இலகுவாக மீள முடியாது. குணதாச அமரசேகர, நலீன் த சில்வா ஆகியோரால் போஷிக்கப்பட்ட சிங்கள பௌத்த இனவாத அரசியல் தேசிய மட்டத்திலான அரசாங்க அரசியலுக்கு மவிமு ஊடாகவே நுழைந்தது. ஆயினும் தற்போது மவிமு வுக்கு பௌத்த இலக்கியத்தில் குறிப்பிடப்படுகின்ற பட்டாசாராவை விட நிர்க்கதியான நிலைக்கு வீழ்வதற்கே நேரிட்டுள்ளது. இதிலிருந்து தப்பிப் பிழைத்திருப்பதற்காகவே விமல் மஹிந்தவுக்கு சூஜாதூக்குகிறார்.

## உச்சிக்கே செல்லுதல்

### TNA மற்றும் தமிழ் தேசியம்

யுத்த தோல்வியின் பின்னர் மிகவும் குறுகியதொரு காலத்தினுள் தமிழ் தேசிய கூட்டணி TNA – வடக்கு, கிழக்கின் பிரதானமான சக்தியாக எழுச்சி பெற்றுள்ளமையை சிங்கள இனவாதிகளால் ஜீரணிக்க முடியவில்லை. அதேபோன்று தமிழ் மக்களின் பெரும்பான்மை நம்பிக்கையை வென்று ரீ.என்.ஏ. வெற்றிபெற்றுள்ளமை டக்ளஸ் தேவானந்தவுக்கும் கருணா அம்மானுக்கும் பெரும் சவாலாக உள்ளது. 'ராவய' பத்திரிகையின் விக்டர் ஐவன் மற்றும் கோமின் தயாசிறி போன்ற மஹிந்தவின் அரசியல் ஆலோசகர்கள் எதைக் கூறிய போதிலும் ராஜபக்ஷ ஆட்சி தொடர்பில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே நிலவுகின்ற விருப்பமின்மையும் குரோதமும் ரீ.என்.ஏ. ஊடாகப் பிரதிபலிப்பதென்பது தெளிவாகின்றது. எதிர்காலத்தில் தமிழ் மக்களிலிருந்து எழுகின்ற எதிர்ப்பை அடக்கும் பொருட்டு ராஜபக்ஷ ஆட்சியானது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடும். இதைத் தொடர்ந்து மீண்டுமொருமுறை தமிழ் மக்களின் தேசிய விடுதலையை வென்றெடுத்தல் தொடர்பான உரையாடல்கள் வெளிப்படுவதைத் தவிர்க்க முடியாது. LTTE யைத் தோல்வியுறச் செய்வதன் மூலம் தமிழ் மக்களை அடக்கி தமது பக்கத்திற்குச் சாய்க்கலாம் என அரசாங்கம் சிந்திக்கின்ற போதிலும் தமது வரலாற்று ரீதியான மற்றும் நியாயமான வேண்டுகோள்களைக் கைவிடுவதற்கு தமிழ் மக்கள் தயாராயில்லை என்பதை விருப்பமின்றியேனும் TNA வுக்கு வாக்களிப்பதற்குத் தீர்மானித்ததன் மூலம் தெளிவாகின்றது.

ஐசோக மற்றும் இடதுசாரிகளின் சவால தேர்தல் அரசியலானது மார்க்ஸிசவாதிகளின் உண்மையான பலத்தை அளவிடக் கூடியதொரு சந்தர்ப்பமல்ல. ஆயினும் வர்க்கப் போராட்டம் வரலாற்று ரீதியில் நிறைவேற்ற வேண்டிய கடமைப் பொறுப்பை நிறைவேற்றாதிருக்கும் காலகட்டங்களில் தேர்தல் அரசியலில் ஈடுபடுவதற்கு புரட்சிவாதிகளுக்கு நேரிடுகின்றது. இந்த அர்த்தத்தில் ஐக்கிய சோசலிசக் கட்சிக்கு கடந்த சில வருடங்களினுள் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல், சனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றில் போட்டியிட நேரிட்டது. இடதுசாரிகள் எனக் கூறிக்கொள்கின்ற பல்வேறு தரப்பினர்கள் மிகவும் வெட்கம்கெட்ட விதத்தில் கொள்கைகள் எதுவுமின்றி சந்தர்ப்பவாத கூட்டணிகளில் சேர்கின்ற போது ஐசோக கொள்கை அடிப்படையிலான ஒரு செயற்பாட்டின் பொருட்டு முதலாளித்துவத்திற்கும் இனவாதத்திற்கும் எதிராகத் தனியாக தேர்தலில் போட்டியிட முன்வந்தது. தனிநபர்வாத குழுச் சேர்க்கைகளின் பெறுபேறாக ஐசோக விலிருந்து விலகியவர்கள் இடதுசாரி முன்னணியுடன் சேர்ந்து சனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட மேற்படி அனைத்துத் தேர்தல்களிலும் போட்டியிட்ட போதிலும் ஐசோக வினால் அத்தகைய இடதுசாரிக் கூட்டணி எனக் கூறப்படுகின்ற அனைத்தையும் தாண்டிச் சென்று அனைத்துத் தேர்தல்களிலும் முன்னணி வகிப்பதற்கு முடியுமாயிருந்தது. குறிப்பாக அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஐசோக வின் தேர்தல் சின்னமான முச்சக்கர வண்டிச் சின்னம் எமது கட்சியின் இணக்கப்பாட்டுடன் தேர்தல் ஆணையாளரால் மீள அமைக்கப்பட்டு வாக்குச் சீட்டில் அச்சிடப்பட்ட சூழலினுள் ஐசோக இடதுசாரிகளில் முதன்மையானதென்ற வகையில் வாக்குத் தளத்தினைப் பாதுகாத்துள்ளமை ஐசோக வின் தேர்தல் சின்னத்துக்கு குறை கூறிய சந்தர்ப்பவாதிகள் அனைவரையும் வாயடைக்கச் செய்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் புதிய இனவாதக் கூட்டத்தினர் எதிர்வரும் காலத்தினுள் மக்களின் உரிமைகளைக் குறைத்து தொழிற் சங்கங்களை செயலிழக்கச் செய்து சனநாயகத்தையும் ஊடக சுதந்திரத்தையும் மென்மேலும் ஒடுக்கி கடும் அடக்குமுறை ரீதியிலான சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்லும். இந்நிலைமைக்கு முகம் கொடுக்கக் கூடிய ஒரேயொரு சக்தியாக ஒழுங்கமையப்பெற்ற தொழிலாளர் வர்க்கத்தின் இயக்கம் மாத்திரமே இருக்கும். இதன் பொருட்டு அறிவுபூர்வமானதொரு தலையீடு நடைபெற வேண்டியுள்ளது. இதன் முன்னோடிப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு பலம்வாய்ந்த விரிவான தொழிலாளர் வர்க்கத்தின் கட்சியொன்றைக் கட்டியெழுப்புதல் தாமதிக்க முடியாததொரு கடமைப் பொறுப்பாகும். இதற்கு இடதுசாரி அமைப்புக்கள், கட்சிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களுடன் கூட வெளிப்படையான கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கு ஐசோக தயாராயுள்ளது. இதன் பொருட்டு அரசியல் வங்குரோத்து நிலைமையை மூடிமறைப்பதற்காக சந்தர்ப்பவாத ரீதியில் தேர்தல் களில் உருவாக்கிக்கொள்ளப் படுகின்ற குழுவாகக் கூடுகின்ற அரசியலை தொழிலாளர் கட்சியொன்றின் அரசியலின் மூலம் தீர்க்கமான விதத்தில் தோல்வியுறச் செய்தல் வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். தேர்தல்கால அலங்கார அரசியல் தற்காலிகமாக முடிவடைந்துள்ளது. இடதுசாரிகள் சார்பில் தோற்றுகின்ற அனைவரும் பேச்சுவார்த்தை மேசையில் சந்திப்பதற்கான காலம் வந்துள்ளது.

படிப்பகம்